# லால்குடி சப்தரிஸ்வரர் கோயில் வரலாறு

**கி. ஜெயலெட்சுமி**
முனைவர் பட்ட ஆய்வாளர் (மு.நே)
சிற்பத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

**மலர்:** 3
**இதழ்:** 4
**மாதம்:** ஏப்ரல்
**வருடம்:** 2019
ISSN: 2454-3993

தமிழக சிவத்தலங்களில் தேவாரப் பதிகப்பாடல் பெற்ற தலங்களும் இத்தேவாரப் பதிகங்களில் தலப்பெயர் மட்டுமே குறிக்கப்பெற்ற வைப்புத்தலங்களும், தலப்புராணங்களைக் கொண்ட கோயில்களும், பிற புலவர்களால் தனிப்பாடல் பெற்ற தலங்களும், பிற்காலத்தில் தோன்றிய தலங்களும் பெரும்பான்மையாக உள்ளன. இவைகளில் தேவாரம் பாடிய மூவர்களின் பதிகங்களில் தலப்பெயர் மட்டும் குறிக்கப் பெற்றவை ‘வைப்புத்தலங்கள்’ என்று அழைக்கப்படுகின்றன. என்றும் வற்றாத வளமுடைய காவிரி பாயும் சோழாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள திருத்தவத்துறை (லால்குடி) சப்தரிஷீஸ்வரர் கோயில் ஒன்றாகும். இத்தலம் திருநாவுக்கரசர் தேவாரப் பதிகத்தில் “பண்டெழுவர் தவத்துறை”[1] என்றும், பெரிய புராணத்தில் “தவத்துறை”[2] என்றும், அருணகிரிநாதர் “திருத்தவத்துறை”[3] என்றும் குறிப்பிட்டுள்ளார். அப்பரின் குறிப்பே முதல் வரலாற்றுத் தரவாகப் பதிவாகி இதன் இதன் காலம் பொ.ஆ.6-ஆம் நூற்றாண்டாக உறுதி செய்யப்படுகிறது.

### லால்குடி பெயர்க்காரணம்

சப்தரிஷீஸ்வரர் கோயில் கோபுரத்தில் சிவப்பு வண்ணம் பூசப்பட்டு மறுசீரமைப்பு நடைப்பெற்றுக் கொண்டிருந்த காலத்தில் டெல்லி சுல்தான் அலாவூதின் கில்ஜியின் படைத்தளபதி மாலிக்காபூர் தமிழகத்தின் மீது படையெடுத்து லால்குடி அருகில் வரும்போது இக்கோயிலின் கோபுரம் சிவப்பு வண்ணத்தில் தெரிந்தது. அவர் அது என்ன லால்குடி என்று கேட்டார். உருது மொழியில் லால் என்றால் சிவப்பு குடி என்றால் கோபுரம் என்று பொருள். மாலிக்காபூரால் லால்குடி என்று அழைக்கப்பட்ட ஊர் அன்றுமுதல் இன்றுவரை லால்குடி என்றே வழங்கி வருகிறது.[4] தமிழக அறநிலையத்துறை ஆவணங்களில் மட்டும் திருத்தவத்துறை என்றே இன்றளவும் உள்ளது.

### அமைவிடம்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் லால்குடி வட்டம் கிழக்குப் பகுதியில் அரியலூர், தஞ்சாவூர் மாவட்டங்களையும், வடக்கு பகுதியில் மண்ணச்சநல்லூர், அரியலூரின் தெற்குப் பகுதியும், மேற்கில் திருச்சி,

தஞ்சை மாவட்டங்களையும் எல்லையாகக் கொண்டுள்ளது. 93 வருவாய் கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாக லால்குடி திகழ்கிறது.

### புராணப் பின்னணி

ஒரு காலத்தில் தாரகன் என்னும் அசுரனைக் கொன்று தேவர்களைக் காக்க வேண்டி சிவபெருமானின் திருவருளால் முருகக்கடவுள் அவதாரம் எடுத்துக் குழந்தையாகத் தோன்றினார். ரிஷி பத்தினிகளில் அருந்ததியானவள் குழந்தைக்குப் பால் கொடுக்க மறுக்கவே கார்த்திகை பெண்கள் அறுவரும் குழந்தைக்குப் பால் கொடுத்தனர். இச்செய்தியைக் கேட்டு ஏழு முனிவர்களும் மனைவிமார்களைச் சபித்து விரட்டிவிட்டார்கள். இதன் காரணமாக முருகனும் முனிவர்களைச் சபிக்க அவர்கள் சாபம் நீங்கும்பொருட்டுத் இத்தலத்துக்கு வந்து தவம் செய்து தங்கள் சாபம் நீங்கப் பெற்றனர்.

அத்திரி, பிருகு, புலஸ்தியர், வசிட்டர், கௌதமர், ஆங்கீசர், மரீசி ஆகியோர் இவ்வேழு முனிவர்களாவர். இவ்வேழு முனிவருக்கும் அருள் செய்ததால் இங்குள்ள இறைவனுக்கு சப்தரிஷீஸ்வரர் என்றும், இத்தலம் சப்தரிஷீஸ்வரர் கோயில் என்றும் அழைக்கப்பெற்று வருகிறது.[5]

### வரலாற்றுச் செய்திகள்

இயற்க்கை எழிலோடு அமையப்பெற்றுள்ள இப்பகுதியில் மருதநில வகையைச் சார்ந்து காணப்பட்டுள்ளது. தொல்பழங்காலத்தில் இருந்தே திருச்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கற்கால நாகரிகத்தை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கி மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் கண்டறியப்பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் கோட்டைமேடு, திருக்காம்புலியூர், கேத்தம்பட்டி, காட்டுபுத்தூர் ஆகிய ஊர்களில் பெருங்கற்கால மக்கள் வாழ்ந்த இடங்களில் இறந்தவர்களைப் புதைக்க பயன்படுத்திய முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன.[6]

இலால்குடி வட்டத்திலும் பெருங்கற்கால மக்கள் வாழ்ந்த தடயங்கள் கிடைத்துள்ளன. திருமங்கலம், இலால்குடி, கொத்தமங்கலம், நகர், திருமணமேடு, பச்சாம்பேட்டை, பின்னவாசல், கோமாகுடி, பனமங்கலம், மேலவானாடி, கோபுரப்பட்டி, சிறுகாம்பூர், பெருவளநல்லூர், காணக்கிளியநல்லூர், ஆலம்பாக்கம், கோவண்டாக்குறிச்சி ஆகிய ஊர்களில் பழைய நத்தம் மற்றும் ஓடைக்கரைப் பகுதிகளில் கிணறு வெட்டும்போதும் ஆங்காங்கே முதுமக்கள் தாழிகள் கிடைத்தது பற்றி அவ்வூர் மக்கள் தெரிவிக்கின்றனர். நிலத்தின் மேற்பகுதியிலும் கருப்பு பானை ஓடுகள் கிடைக்கின்றன. திருச்சியின் ஒரு பகுதியாகத் திகழும் உறையூரில் செய்யப்பட்ட அகழாய்விலும் கி.மு.2-ஆம் நுற்றாண்டுக்கு முற்பட்ட எழுத்துக்கள் பொறித்த கருப்பு, சிவப்பு பானை ஓடுகள் கிடைத்துள்ளன. இச்சான்றுகள் மூலம் தொல் பழங்கால நாகரிகத்தின் இறுதியில் நிலவிய பெருங்கற்கால நாகரிகம் இப்பகுதியில் இருந்ததை அறியமுடிகிறது.[7]

சங்ககாலச்சோழர் இப்பகுதியில் வாழ்ந்து வந்தது நாகர் இனமக்களை வென்று தங்கள் ஆட்சியை நிறுவியுள்ளனர். சோழநாடு, காவிரிநாடு, காவிரிசூழ்நாடு மற்றும் புனல்நாடு என்ற பெயர்களால் சங்ககாலச் சோழ அரசு நிலப்பகுதியை அழைத்தனர். காவிரி பள்ளத்தாக்கில் நீரோட்டம் சென்றதால் வேளாண்மை சிறந்து விளங்கியது. இதனால் சோழநாடு சோறுடைத்த நாடு என அழைக்கப்பட்டது. இதனைச் சங்க இலக்கியங்கள் மூலம் அறியலாம். ஆவை தன்சோழநாடு(புற.382), சோழநல்நாடு (புற.67), நெடுஞ்சோழநாடு (பட்.28), வழம்கெழு சோழர் (நற்.400), கொற்றவைச் சோழர் (நற்.10), என்று சோழரும் பாராட்டப்பெற்றனர். சோழநாட்டை காவிரிநாடு என்னும் சோழனைக் காவிரி நாடன் என்றும் சிலம்பு பாராட்டும் (சிலம்.1.5).

கிள்ளிவளவன், சென்னிசோழன் போன்ற பெயர்கள் தாங்கிய சோழ மன்னர்களைப் பற்றிய சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. சோழநாடு தற்போதைய தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களை உள்ளடக்கியதாக இருந்தது. இந்தக்காலகட்டத்தில் சோழமன்னர்கள் பல கோயில்களை காவிரி இருகரைகளிலும் உருவாக்கினர். அவ்வாறு எடுப்பிக்கப்பட்ட கோயில்களுள் லால்குடி சப்தரிஷீஸ்வரர் கோயிலும் அடங்கும்.

### கல்வெட்டுகள்

லால்குடி சப்தரிஷீஸ்வரர் கோயிலிருந்து இந்திய அரசின் கல்வெட்டுத்துறை 72 கல்வெட்டுகளைப் படியெடுத்துள்ளது.[8] அவற்றுள் 27 கல்வெட்டுகள் தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதிகளில் வெளியாகியுள்ளன.[9] மேலும் 74 புதிய கல்வெட்டுகள் வரலாறு இதழிலும் வெளியாகியுள்ளன.[10] மொத்தம் 146 கல்வெட்டுகள் சப்தரிஷீஸ்வரர் கோயிலில் படியெடுக்கப்பட்டுள்ளன. ஒன்று இரண்டாம் வரகுண பாண்டியனின் (பொ.ஆ.867-885) பதிவாக உள்ளது. 62 கல்வெட்டுகள் சோழர்கள் காலத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. ஐந்து கல்வெட்டுகள் இராண்டாம் பாண்டிய அரசர் காலத்திலும் ஐந்து கல்வெட்டுகள் விஜயநகர அரசர்கள் காலத்திலும் ஒன்று ஓய்சாள அரசர் வீரராமநாதர் ஆட்சியின்போதும் பொறிக்கப்பட்டுள்ளன. 69 கல்வெட்டுகள் மன்னர் பெயர் குறிப்பிடப்படவில்லையெனினும் 50 விழுக்காடு சோழர்கால எழுத்தமைதியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. மன்னர் பெயர் சுட்டும் சோழர் கல்வெட்டுகளில் முதலாம் பராந்தகன் கல்வெட்டுகளே எண்ணிக்கையில் மிகுதியாக உள்ளன. சோழ அரசர்கள் அடுத்தடுத்து பரகேசரி, இராஜகேசரி என்ற பெருமைப் பெயர்களில் முறையே 16, 8 கல்வெட்டுகள் உள்ளன. பொ.ஆ.9-ஆம் நூற்றாண்டிலிருந்து 19-ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்து பொறிக்கப்பட்டிருக்கும் இந்த 146 கல்வெட்டுகளும் அரும்பெரும் பதிவுகளாக அமைந்து லால்குடி கோயிலின் 1000 ஆண்டுகால வரலாற்றை வெளிப்படுத்துவதன் மூலம் அக்கால அரசு, சமுதாயம், சமயம் தொடர்பான தரவுகளை முன்வைக்கின்றன.

### காலம்

திருநாவுக்கரசர் தேவாரத்தில் இத்தலத்தின் பெயர் “பண்டெழுவர் தவத்துறை” என்றும் குறிப்பிடுவதால் இதன் காலம் பொ.ஆ.6-ஆம் நூற்றாண்டு என அறியமுடிகிறது. பல்லவ மன்னன் நந்திபோத்தரையன் (பொ.ஆ.867), நிருபதுங்கவர்மன் (பொ.ஆ.871), இரண்டாம் வரகுணபாண்டியன் (பொ.ஆ.867-885), காலத்தில் செங்கல் கட்டுமான இருந்த கோயில் முதலாம் ஆதித்தனின் (பொ.ஆ.871-907), இறுதி ஆட்சி ஆண்டில் கற்றளியாகத் தொடங்கப்பட்டு முதற்பராந்தக சோழனால் முழுமைப்படுத்தப்பட்டுள்ளது.

### கோயில் அமைப்பு

இக்கோயில் ஊரின் நடுவில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. கோயிலுக்கு வெளியே முன்புறம் உயர்ந்த நாற்கால் மண்டபம் அமையப்பட்டுள்ளது. தொடர்ந்து சிவங்கை மீன்மண்டபம், இந்நடையின் இடைப்பகுதியில் சிவகங்கைத் திருக்குளம், வசந்தமண்டபம் நடையின் வடவாயிலில் நான்கு பிரகாரங்கள் அமையப்பட்டுள்ளன. இரண்டாவது பிரகாரம் திருச்சுற்றில் பெருந்திருப்பிராட்டியர் அம்மன் சன்னதி வடக்கு மூலையில் கிழக்குப் பார்த்தவாறும், மேற்கில் நடனமண்டபம், (சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும் இடம்) கிணறு, தேர் போன்றவையும், மூன்றாம் பிரகாரத்தில் மடவளாகமும் நான்காவது பிரகாரம் தேரோடும் வீதியாகவும் அமையபெற்றுள்ளன.

**கருவறை**

மேற்கு நோக்கிய கருவறையாக அமையப்பெற்ற இக்கோயில் நாகர ஆதிதளம் பெற்று வேசர கிரீவம் மற்றும் சிகரத்துடன்கூடிய ஒரு தள விமானமாகக் காட்சியளிக்கிறது. ஏளிய பத்திப்பிரிப்புடன் கூடிய ஆதிதளத்தில் சாலைப்பகுதி மட்டும் சற்று முன்னிழுக்கப்பட்டு கோட்டத்துடன் அமையப்பட்டுள்ளது.

**விமானம்**

ஒருதளக் கலப்பு வேசரமாய்ச் சாலைப்பத்திப் பிதுக்கத்துடன் உள்ள இறைவன் விமானம், உபானம், தாமரை ஜகதி, சிறு தாமரை வரிகளால் தழுவப்பட்ட உருள்குமுதம், பிரதிவரி கொண்ட பத்மபந்தத் தாங்குதளத்துடன் உருவாகியுள்ளது. இதன் வடபுற உபானத்தில் சாலைப் பத்தியுடன் நடுவிருக்குமாறு யாளித்தலைப்புடான முழுக்காட்டு நீர்வழி காட்டப்பட்டுள்ளது. பல்லவ, முற்காலச்சோழர் முதல் பகுதி கலைமுறையிலிருந்து முற்றும் மாறுபட்ட அமைப்பில் வடிவாக்கப்பட்டுள்ள இதன் சிற்பங்களில் ஓங்கிய வாளும் ஏந்திய கேடயமும் கொண்ட யாளிவீரர்களின் எழுச்சிமிகு அணிவகுப்பைப் பார்க்கமுடிகிறது.

**மண்டபங்கள்**

விமானக் கட்டுமானத்தை அப்படியே பின்பற்றியுள்ள முக மண்டபத்தில் பத்திப் பிதுக்கமோ, கோட்டங்களோ இல்லை. அதன் இருபுறச் சுவர்களிலும் பழைமையான கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இம்மண்டபத்தின் வடபுற உபானத்திலும் நீர்வழி ஒன்று காட்டப்பட்டுள்ளது. பெருமண்டப வட தென் சுவர்கள் (பழைய கட்டுமானத்தின் புறச்சுர்கள்) முக மண்டபம் ஒட்டிய கட்டமைப்புடன் வேதிபாதச் சிற்பங்களின்றி அமைந்திருந்த போதும் பக்கத்திற்கொரு அகலமான கோட்டம் பெற்றுள்ளன. வெறுமையான அக்கோட்டத்தை வேலைப்பாடற்ற மகரதோரணம் தலைப்பிட்டுள்ளது. வடசுவரின் மேற்குத் திருப்பத்திலிருந்து 5.14மீ. அளவில் 68.செ.மீ. அகலத்திற்குப் பிரதிவரி, வேதிகைத்தொகுதி ஆகியன அகற்றப்பட்டுள்ளமை, அப்பகுதி பெருமண்டபத்திற்கான வடக்கு வாயஜாலாக இருந்து பின்னாளில் அடைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

பெருமண்டப வெளிச்சுவர் பத்மபந்தத் தாங்குதளத்தின் மீதெழும் உறுப்பு வேறுபாடற்ற நன்முக அறைத்தூண்கள் கொண்டுள்ளது. அவற்றின் மேலுள்ள வெட்டுத் தரங்கப் போதிகைகள் உத்திரம் தாங்க, மேலே வாஜனம், வெறுமையான வலபி பூமிதேசத்துடன் மீண்டுமொரு உத்திரம், வாஜம், வலபி கொண்டு முடிகிறது.

**சிற்பக்கலை**

தவத்துறைக் கோயில் சிற்பங்களை அளவு கருதிப் பெரியன, இடைநிலையின, சிறியன என மூவகைப்படுத்தப்படுகிறது. இவற்றின் திருமுன் காவலர்கள், கோட்டச் சிற்பங்கள் ஆகியவற்றின் முதல் வகையிலும் இறைவன் விமான வேதிபாதங்கள் ஆகியவற்றின் இடம் பெற்றுள்ள சிற்பங்களை மூன்றாம் வகையிலும் இணைக்கலாம். இக்கோயிலில் சிற்பங்கள் கண்கவரும் வண்ணம் பல வகைகளில் கல்சிற்பங்கள், புடைப்புச்சிற்பங்கள், செப்புத்திருமேனிகள் காணப்படுகின்றன. அவற்றுள் தேவக்கோட்ட சிற்பமாக வீணாதர தட்சிணாமூர்த்தி சிற்பமும், மாளிகை சிற்பமாக கட்வாங்க ஈஸ்வரர் சிற்பமும் முக்கிய கூறுபாடக உள்ளன.

**வீணாதர தட்சிணாமூர்த்தி**

இத்தலத்தில் வீணாதர தட்சினாமூர்த்தி தேவக்கோட்ட சிற்பமாக நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். தாமரைத்தளத்தில் சமநிலையில் பாதங்களை நிறுத்தி, இட முழங்காலைச் சற்று மடித்த நிலையில் வீணை வாசிக்கும் இறைவனின் சடைமண்டலக் குழல்கள் முகத்தின் இருபுறத்தும் பரவியுள்ளன. சடைமண்டல நடுவில் பதக்க அணி போல் மண்டையோடு, வலச்செவியில் மகரகுண்டலமும், இடச்செவியில் பனையோலைக் குண்டலமும் கொண்டுள்ளது.

முப்புரிநூல், உதரபந்தம், தோள், கை வளைகள், சிற்றாடை, அரைக்கச்சு, இடக்கட்டு அணிந்து பன்னிரு கைகளைக் கடகத்திலிருத்தி, முன்னிரு கையால் வீனை மீட்டுகிறார். இறைவனின் இரண்டு தொடைகளையும் டைக்கட்டு முடிச்சின் தொங்கல்கள் தழுவியுள்ளன.

**கட்வாங்க ஈஸ்வரர்**

கட்வாங்க ஈஸ்வரர் சிவபெருமானின் அம்சம், காபாலிகர்கள் வழிபட்ட தெய்வம் தமிழ்நாட்டிலேயே இத்தலத்தில்தான் உள்ளது. கட்வாங்க சிவபெருமானின் வலது முன் கையில் தம்பூரா கொண்டும், பின் கையில் சூலம் கொண்டவராகவும், இடது முன் கை தொடை மீதமர, பின் கையில் கட்வாங்கம், தலையில் ஜடாமுடியின் நடுவில் மண்டை ஓடு, நெற்றிக்கண், கோரைப்பற்கள், மகர பனையோலைக் குண்டலங்கள், சவடி, சரப்பளி, தோள்வளை கை வளையல்கள், முப்புரிநூல், உதரபந்தம் போன்றவற்றை பெற்று சுகாசனத்தில் இச்சிற்பம் அமைந்துள்ளது.

**பூஜையும், திருவிழாக்களும்**

இத்தலத்தில் உள்ள இறைவவனுக்கு நாள்தோறும் உஷாக்காலம், காலைசந்தி, உச்சிகாலம், மாலை சாயரட்சை, இரண்டாங்காலம், இரவு அர்த்தசாமம் என ஆறு காலங்களிலும் அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. இக்கோயிலில் முக்கிய திருவிழாக்களாக சித்ரா பௌர்ணமி, ஆடிப்பூரம், நவராத்திரி, பங்குனி உத்திரம் ஆகியன ஆண்டுதோறும் சிறப்பாக நடைப்பெற்று வருகின்றன.

இத்தலத்தில் ஆதிரைப் பெருவிழாவானது ஒவ்வொரு ஆண்டும் மார்கழி மாதத்தில் திருவாதிரை நட்சத்திரத்தன்று இவ்விழா நடைப்பெறும். தமிழ்நாட்டிலேயே சிதம்பரத்திற்கு அடுத்தாற்ப்போல் ஆருத்துரா தரிசனமும், ஆனந்த நடனமும் இத்தலத்தில் சிறப்பாக நடைப்பெற்று வருகின்றன.

இக்கோயிலில் பங்குனி மாதத்தில் பெருவிழா, (பிரம்மமோட்ஷவம்) மிக சிறப்பாக நடைப்பெற்று வருகின்றது. இத்திருவிழாவின் ஒன்பதாம் நாளன்று நூறு ஆண்டுகள் பழமையான அலங்காரத்துடன் 75 அடி உயரம் உடைய சுவாமி தேர், அம்மன் தேர், விநாயகர் தேர், முருகன் மற்றும் சண்டிகேஷ்வரர் தேர் ஆகிய ஐந்து தேரோட்டம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

**நிர்வாகம்**

இக்கோயில் தமிழக அரசின் கீழ் இயங்கும் இந்து சமய அறநிலைய ஆட்சி துறையின் ஆளுகைக்குட்பட்டது. இத்திருக்கோயில் 46 (III)-ன் கீழ் இரண்டாம் நிலை செயல் அலுவளரால் நிர்வாகிக்கப்பட்டு வருகின்றது.

## குறிப்புகள்

1. திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், மூன்றாம் பகுதி, உமா பதிப்பகம், சென்னை, 2003, பா.2645.
2. அருணகிரிநாதர், திருப்புகழ் (மூலம்), உமாபதி பைண்டிங், சென்னை, 2002, ப.928.
3. சேக்கிழார், பெரியபுராணம், சேக்கிழார் ஆராய்ச்சி மையம், 1990, பா-2250.
4. ச.வேதநாராயணன், பண்டெழுவர் தவத்துறை, சென்னை, 2008, ப.26.
5. திருக்கோயில்கள் வழிக்காட்டி, இந்து சமய அறநிலையத்துறை, தமிழ்நாடு அரசு, திருச்சிராப்பள்ளி மாவட்டம். 2016. ப.32.
6. இராசமாணிக்கம், தமிழக வரலாற்று வரிசை, அமிர்தம் பதிப்பகம், சென்னை, 2008, ப.3.
7. N.Karashima, Socio-Cultural change in village in Tiruchirappalli District, tamil Nadu, India, pre-modern period, Tokyo, 1983, p.9.
8. A.R.E. 84-89,1892, 98-142,1928-29, 250,1931,660-679,1962-63.
9. S.I.I., 4,531- 536, 12, 61, 14, 12A,B, 13, 74, 75, 123, 204, 240, 325, 19, 71, 112, 113, 146, 270, 271, 288-290, 330, 356, 408.
10. இரா.கலைக்கோவன், வரலாறு ஆய்விதழ் 4, பக்.9-13, 12-13, பக்.15-21, 26, பக்.5-33.